
பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 03 | ஞாயிற்றுக்கிழமை | 16.06.2024 | அதிர்வு 320

## மொட்டுக் கட்சியின் ஆதரவு ரணிலுக்கே!

### ஐ.தே.க. அதீத நம்பிக்கை




வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் 05▶



# அன்று 13 ஐ அமுலாக விடாமல் தவறிழைத்தது தமிழர் தரப்பே!

## அமைச்சர் டக்ளஸ் பகிரங்கக் குற்றச்சாட்டு

(எஸ்.நிதர்ஷன்)

"அன்றைக்கு 13 ஆவது திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதை நடைமுறைப் படுத்த விடாமல் உண்மையாகவே தவறிழைத்தது இலங்கையோ, இந்திய அரசோ அல்லது சர்வ தேசமோ அல்ல. அதில் தமிழர் தரப்புத்தான் முழுமையாக தவறிழைத்துக் கோட்டைவிட்டது. இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தோடு தென்னிலங்கை ஆட்சியாளர்களின் குணாதிசய ரீதி யான மாற்றங்கள் அன்று ஏற்பட்டிருந்தன. ஆனால், அந்த வாய்ப்பை நாம் பயன்படுத்தத் தவறி விட்டோம். எங்களுக்கு வினை விதைத்தது நாமே தானே, வேறு யாரும் அல்ல."

- இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். 05▶

## "பொது வேட்பாளர் முயற்சி தமிழினத்துக்கு ஆபத்தே!"

(எஸ். நிதர்ஷன்)

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் அவசிய மில்லை என்றே நினைக்கின்றேன். அந்த முயற்சியானது தமிழ் மக்களுக்குப் பயனற்றது மாத்திரமல்ல அது பாதிப் பையே ஏற்படுத்தும்."

– இவ்வாறு ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச் சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சித் தலைமை அலுவ லகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பா ளரை நிறுத்துவது தொடர்பில் சிலர் பேசி வருகின்றனர். அதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டு 06▶

## தீபச்செல்வனை மீண்டும் விசாரணைக்கு அழைத்துள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு



எழுத்தாளர் தீபச்செல்வனை மீண்டும் விசாரணைக்கு வருமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு எழுத்து மூலம் அழைப்பு விடுத் துள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி மீண் டும் விசாரணைக்கு வருமாறு பயங் கரவாதத் தடுப்புப் பிரிவு அழைத் துள்ளது என்று தீபச்செல்வன் தெரி வித்துள்ளார்.

ஈழத்தின் மூத்த எழுத்தாளரின் புத்தக வெளியீட்டை 05▶



இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் மத்திய குழு இன்று மீண்டும் வவுனியாவில் கூடுகின் றது.

கடந்த மத்திய குழுக் கூட்டத்தின் அதே நிகழ்ச்சி நிரல்தான் இன் றைய கூட்டத்துக்குமான அறிவித்தலிலும் காட்டப்பட்டுள்ளது.

கட்சிக்கு எதிரான வழக்கு விடயம், ஜனாதி பதித் தேர்தல் ஆகியவையே நிகழ்ச்சி நிரலில் அடக்கப்பட்டுள்ளன.

கடந்த மத்திய குழுக் கூட்டத்தில் வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட் பாளர் ஒருவரை நிறுத்தும் திட்டத்திற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. 06▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

# தமிழக மீனவர்கள் இலங்கையின் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டுகின்றமை தவிர்க்க முடியாத ஒன்று

## இராமேஸ்வரம் விசைப்படகு மீனவ சங்கத் தலைவர் ஜேசுராஜா விளக்கம்

(ந.லோகதயாளன்)

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டுவது தவிர்க்க முடியாத ஒன்று என இராமேஸ்வரம் விசைப்படகு மீனவ சங்கத் தலைவர் பென்சின்கிளாஸ் ஜேசுராஜா தெரிவிக்கின்றார்.

தமிழ் நாட்டில் 60 நாள்கள் மீன்பிடித் தடைக்காலம் முடிவடைந்து மீண்டும் தொழிலுக்காக கடலுக்கு புறப்படும் நிலையில், இலங்கை மீனவர்கள் தமது வளங்களும் வாழ்வாதாரமும் பாதிக்கப் படக் கூடும் என அச்சம் வெளியிடுவது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் வெளிநாட்டு மீனவர்கள் தமது கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடல் வளங்களை சூறையாடுவதால், தமது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படுவதாக இலங்கையின் வட மாகாண மீனவர்கள் கூறி வருகின்றனர்.

தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் நுழைவது தவிர்க்க இயலாத ஒரு விடயம். இருப்பினும்

இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் நோக்கம் தமிழக மீனவர்களான எமக்கு ஒரு போதும் கிடையாது.

தடைக் காலம் முடிவுற்று நேற்று முதல் கடலிற்கு செல்லும் தமிழக மீனவர்கள் ஏக்கத்துடனேயே கடலிற்கு பயணிக்கின்றனர்.

போரினால் பாதிக்கப்பட்ட தம்மை தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் வதைக்கின்றனர் என வட மாகாண மீனவர்கள் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டுகின்றனர். போரின்போது ஈழத் தமிழர்கள் அனுபவித்த கொடூரங்கள், இழப்புக்கள், உயிரக் கொடைகள் அளவிடவோ எண்ணைக்கை கூறவோ முடியாதவை என்பதனை ஏற்றுக் கொள்கின்றோம். ஆனால் அதே யுத்த காலத்தில் ஈழத் தமிழ் மக்களின் வாழ்வியலுக்காக உயிர் வாழ் பொருள்கள் உட்பட எவற்றையெல்லாமோ சுமந்து சென்றும் எமது மீனவர்கள் வழங்கினர். அதன்போதும் எத்தனையோ உயிர்களையும் படகுகளையும் நாமும் இழந்தோம். அந்த இழப்பு ஈழத் தமிழர்களின் இழப்போடு ஒப்பிட்டால் அது சொற்பம்தான்.

இன்று தமக்காக இந்திய மீனவர்களைக் கைது செய்ய வேண்டும் எனக் கோருத் அதே கடறபடையினரே எமது உடன் பிறப்புக்களை அன்று கொன்றொழித்தனர்.

இலங்கை – இந்தியா இடையேயான கடற்பரப்பு மிகவும் குறுகியது.

கடற்காற்று காரணமாக படகுகள் அவர்கள் கடற்பரப்பிற்குள் செல்லக் கூடும். அதுமட்டுமல்ல, பல சமயங்களில் திசைக்காட்டும் கருவி, ஜி.பி.எஸ். செயலிழந்துவிடும். இப்படியான காரணங்களினாலும் இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைந்துவிடுகிறோம்.

இலங்கை வட பகுதி மீனவர்கள் மீது எமக்குப் பரிவு உண்டு. அந்தச் சகோதர மீனவர்களுக்கு எங்கள் ஆதரவு என்றும் உண்டு. இலங்கை தமிழ் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட தமிழ்நாட்டு மீனவர்கள் ஒரு காரணமாக இருக்கமாட்டோம்.

அந்த மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் பின்னணியில் அரசியலும் இருக்கிறது. இன்று எமது படகுகளில் பயணிக்கவே தமிழக மீனவர்கள் பயப்பிடும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. படகிற்கு அழைத்தால், இலங்கைச் சிறையில் இருக்க நேர்ந்தால் அக்காலத்தில் குடும்பத்தின் நிலை என்ன என்கின்றனர். இதேநேரம் தமிழகப் படகு உரிமையாளர்கள் அனைவருக்கும் நிதி வல்லமையும் கிடையாது.

2023 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஓர் உண்மைச் சம்பவம் இது. தனது தாய், சகோதரி மற்றும் மனைவியின் நகைகளை அடகு வைத்து 2021 ஆம் ஆண்டு வாங்கிய படகு யாழ்ப்பாணத்தில் பிடிபட்டு மயிலிட்டித் துறைமுகத்தில் நிற்பதாக அறிந்து அங்கே சென்று அப் படகைப் பார்த்து திரும்பிய பின்பு தற்கொலை வரைக்கும் சென்றாரே ஒரு மீனவர். இதுவும் வாழ்வாதார நெருக்கடிதான். – என்றார் அவர்.

# ருமேனியாவில் தொழில் பெற்றுத்தருவதாகக் கூறி 130 லட்சம் ரூபா மோசடியில் ஈடுபட்டவர் கைது

ருமேனியாவில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி இடம்பெற்ற பாரிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி தொடர்பில் தகவல்கள் அம்பலமாகியுள்ளன.

இது தொடர்பில் மாத்தறையில் நிறுவனமொன்றை நடத்திச்சென்ற சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் ருமேனியாவில் தொழில் பெற்றுத் தருவார் எனக் கூறி பலரிடம் பண மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

130 லட்சம் ரூபாவிற்கும் அதிகத் தொகைப் பணத்தை அவர் மோசடி செய்துள்ளார் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு 53 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என பணியகத்தின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



மோசடியுடன் தொடர்புடைய நிறுவனம், வேலைவாய்ப்பு பணியகத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் நிறுவனத்திற்கான அனுமதிப் பத்திரம் கடந்த பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதியுடன் காலாவதியானதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபர் மாத்தறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், தலா 05 லட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், சந்தேகநபர் வெளிநாடு செல்லத் தடை விதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.



# கால்நடைகள் கடத்தப்படுவதை முறியடித்த பொலிஸ் பொறுப்பதிகாரிக்குக் கௌரவம்

## சிவசேனை அமைப்பினர் நேரில் சென்று வழங்கினர்

(கே.வசந்தன்)

வடக்கில் இருந்து புத்தளம் மற்றும் கொழும்பு நோக்கி இரு வாகனங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆடு மற்றும் மாடு என்பவற்றின் கடத்தலை முறியடித்தமைக்காக ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு சிவசேனை அமைப்பு நேற்று கௌரவிப்பு வழங்கியுள்ளது.

வவுனியா, ஓமந்தை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயத்திலக தலைமையில் ஏ9 வீதியில் விசேட சோதனை ஒன்றை பொலிஸார் மேற்கொண்டனர்.

இதன்போது ஏ9 வீதியூடாக பயணித்த வாகனங்களை சோதனை செய்த போது இரு வாகனங்கள் நிறுத்தாது வீதியூடாகத் தப்பிச் சென்றுள்ளன. விரட்டிச் சென்ற பொலிஸார் அவ்விரு வாகனங்களையும் வழிமறித்து சோதனை செய்ததில் வாகனத்தில் சட்டத்திற்கு முரணாக உரிய அனுமதிகளின்றி கடத்தப்பட்ட 70 ஆடுகள் மற்றும் 18 மாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன.



வடக்கின் கிளிநொச்சியிலிருந்து புத்தளம் நோக்கி கடத்தப்பட்ட 70 ஆடுகளுடன் கூடிய வாகனத்தையும் பொலிஸார் மீட்டுள்ளதுடன், வாகனத்தில் பயணித்த இரண்டு நபர்களையும் கைது செய்துள்ளனர். மற்றைய வாகனம் வடக்கின் முல்லைத்தீவிலி ருந்து கொழும்பு நோக்கி கடத்தப்பட்ட 18 மாடுகளுடன் மீட்கப்பட்டதுடன் அதனை கொண்டு சென்ற இரண்டு நபர்களையும் பொலிஸார் கைது செய் துள்ளனர்.

இதனையடுத்து மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதற்கு சட்டவிரோதமாக கொண்டு சென்ற போது அதனை தடுத்து நிறுத்தியமையைப் பாராட்டி சிவசேனை அமைப்பின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் தவத்திரு அ. மாதவன், சு.வரதகுமார் உள்ளிட்ட அமைப்பின் பிரமுகர்கள் ஓமந்தை பொலிஸ் நிலையம் சென்று பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஜெயத்திலக அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி பாராட்டுக்களைத் தெரிவித்தனர்.









# வெண்ணிற ஈ தாக்கத்தினால் இளநீர் ஏற்றுமதியில் வீழ்ச்சி

வெண்ணிற ஈ தாக்கத்தினால் இளநீர் செய்கைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

வெண்ணிற ஈ நோய்த் தாக்கத்தினால் இளநீர் ஏற்றுமதியில் 30 வீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் நிலவிய வறட்சியினால் வெண்ணிற ஈக்களின் பரவல் அதிகரித்துள்ளது.

வெண்ணிற ஈ, மஞ்சள் நிறத்தினால் அதிகம் ஈர்க்கப் படுவதால், இளநீர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தெங்கு அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# மருந்துகள் தட்டுப்பாடின்றி மக்களுக்கு வழங்கப்படும்

## சுகாதார அமைச்சர் அறிவிப்பு

850 அத்தியாவசிய மருந்துகளில் சில மருந்துகளைத் தவிர அனைத்து உயிர்காக்கும் மருந்துகளும் தட்டுப்பாடின்றிப் பேணப்படுகின்றன என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

எல்பிட்டியவில் நேற்று இடம்பெற்ற நடமாடும் சுகாதார வைத்திய நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே சுகாதார அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மருந்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தேசிய கொள்வனவு முறைமைக்கு அமைவாக உயர்தர மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு தட்டுப்பாடின்றி மக்களுக்கு வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.





# வாகன இறக்குமதி தொடர்பில் விசேட குழு நியமிக்கப்பட்டது

வாகன இறக்குமதி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பான எதிர்கால வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கான விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பொன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட உள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை ஒருபோதும் அனுமதிக்கவே முடியாது!

## அமைச்சர் டக்ளஸ் திட்டவட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

"எமது கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது."

– இவ்வாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது இந்திய மீனவர் விவகாரம் தொடர்பான கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. அவ்வாறு அத்துமீறல்கள் இனிமேல் நடக்காது என்று இப்போது என்னால் உறுதியாகச் சொல்லவும் முடியாது.

ஆனால், இதனை நாங்கள் அனுமதிக்கப் போவதில்லை என்ற அரசினுடைய கொள்கையும் இதில் விசேடமாக கடல் தொழில் அமைச்சருடைய எண்ணமும் எல்லோருக்கும் தெரியும்.

அந்தவகையில் இந்திய இழுவைப் படகுகளில் அத்துமீறி எல்லை தாண்டி வந்து சட்டவிரோத தொழில்களில் ஈடுபடுவதை எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது

அதனை இராஜதந்திர ரீதியாக மட்டுமன்றி சட்ட ரீதியாகவும் எதிர்கொண்டு தடுக்கத் தயாராக இருக்கின்றோம். அதற்கான முனைப்புகளிலேயே தற்போதும் ஈடுபட்டு வருகின்றோம்.

எமது ஜனாதிபதி இந்தியா சென்றபோது இரு நாட்டு மீனவர் விவகாரம் தொடர்பில் இந்தியப் பிரதமருடன் பேசியுள்ளார். அதேபோல் இந்திய வெளிவிவகார அமைச்சருடனும் பேசியிருக்கிறார்.

வடக்கு மாகாண மீனவர்களுடைய இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் நான் தெளிவாக இருக்கின்றேன்.

அரசியலுக்காக எதையும் பேசுவதில்லை. மக்கள் நலன் சார்ந்தே என்னுடைய செற்பாடுகள் அமையும்." – என்றார்.

## அன்று 13 ஐ அமுலாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாப்பாணத்திலுள்ள தமது கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போது அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் வடக்கு மாகாணத்துக்கு வந்து சென்றிருக்கின்றனர். அவர்கள் வந்து என்ன பேசியிருக்கின்றனர் என்பதும், ஏனைய தமிழ்க் கட்சியினர் என்ன கேட்டிருக்கின்றனர் என்பதும் உங்களுக்குத் தெரியும்.

குறிப்பாக இங்குள்ள தமிழ்க் கட்சியினர் அவர்களிடத்தே 13 ஆவது திருத்தத்தில் காவாசி தாறியா, அரைவாசி தாறியா, முக்கால்வாசி தாறியா என்று கேட்டிருக்கின்றனர். ஆனால், நாங்கள் அப்படிக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை.

உண்மையில் தமிழ் மக்களின் போராட்டங்கள், தியாகங்களாலேயே இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஊடாகவே இந்த 13 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

அந்தத் திருத்தம் நமக்குக் கிடைக்கின்றபோது காவாசி, அரைவாசி, முக்கால்வாசி என்றெல்லாம் இருக்கவில்லலை. அது முழுமையாகத்தான் இருந்தது.

அதனை நடைமுறைப்படுத்துகின்ற காலத்தில் இந்தியா தனது படைகளையும் அனுப்பியிருந்தது. இவ்வாறு ஒரு பக்கம் தன்னுடைய படைகளை அனுப்பிய அதேநேரத்தில் இராஜதந்திர ரீதியாகவும் நடவடிக்கைகளையும் இந்தியா எடுத்திருந்தது.

ஆனால், துரதிஷ்டவசமாக பிரச்சினைகளைத் தீர்க்க விரும்பாதவர்கள் 13 ஆவது திருத்தத்தில் ஒன்றுமில்லை என்று அன்றைக்குக் கூறிவிட்டார்கள். அது மாத்திரமல்லாமல் 13 ஆவது திருத்தத்தைத் தும்புத் தடியால் கூட தொடமாட்டோம் என்றும் அவர்கள் கூறியிருந்தார்கள். அன்று அவ்வாறு கூறியவர்கள் இன்று என்ன கேட்கின்றனர் என்று பாருங்கள்.

இங்கு ஒரு விடயத்தை நான் கூறி வைக்க வேண்டும். அதாவது நீண்ட காலத்துக்குப் பின்னர் என்னுடைய நண்பர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் நானும் ஒரு நிகழ்வில் அருகருகே அமர்ந்திருந்து உரையாடும் சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது.

அப்போது அன்றைக்கே இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை நாம் ஏற்று இருக்கலாம் என்றும், நாங்கள் எங்கேயோ சென்று இருக்கலாம் என்றும் கூறியிருந்தேன். அதற்கு அவருடைய பதில் என்னுடைய கருத்தை அவர் ஏற்றுக்கொள்வதாகவே இருந்தது.

உண்மையில் இதனையே அவர் மனசுக்குள்ளே அப்படி நினைத்துக் கொண்டிருக்கின்றார் என்று நினைக்கின்றேன். அதனைச் செய்ய வேண்டிய நேரத்தில் அனைவருமாகச் செய்யாமல் நாங்கள் எல்லாம் கோட்டை விட்டுவிட்டோம் என்பது எங்களுக்கு அசிங்கம் அல்லது அவமானம் என்றுதான் நினைக்கின்றேன்.

தென்னிலங்கை அரசாக இருக்கலாம், இந்திய அரசாக இருக்கலாம் அல்லது சர்வதேச சமூகமாக இருக்கலாம், இந்த மூன்று தரப்பினரும் தங்களின் நலன்களிலேயே அக்கறையாக இருப்பார்கள், எங்கள் நலனில் அக்கறையாக இருக்கமாட்டார்கள்.

இன்று பாலஸ்தீனத்திலும் காஸாவிலும் சர்வேச சமூகம் என்ன செய்து கொண்டிருக்கின்றது. அந்தப் போரில் அழிவு முற்றுப்பெறும் வரை தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருக்கின்றது. அதுதான் நமக்கும் நடந்து முடிந்திருக்கின்றது. எனவே, இவர்களை நம்பிக் கொண்டிப்பதை விடுத்து நாம் எமது பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்துக்கொள்ளலாம் என்று சிந்தித்து அதற்கேற்ற வகையில் செயற்பட வேண்டியது அவசியம்."

– என்றார்.

## தீபச்செல்வனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடத்தியமைக்காகக் கடந்த ஏப்ரல் 11ஆம் திகதி தீவிர விசாரணைக்குத் தான் உட்படுத்தப்பட்டிருந்த நிலையில் மீண்டும் இவ்வாறு விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

கலை இலக்கியவாதிகள் மீது மேற்கொள்ளும் இத்தகைய அடக்குமுறைகள் இலங்கைத் தீவில் படைப்புச் சுதந்திரம் எதிர்கொண்டுள்ள அவல நிலையைத்தான் காட்டி நிற்கின்றது என்றும் தீபச்செல்வன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மொட்டுக் கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைக்கும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார நம்பிக்கை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகவே ரணில் விக்கிரமசிங்க வருவார். எனவே, யானை சின்னம் மாறக்கூடும். ஐக்கிய தேசியக் கட்சி வசம் 30 இலட்சம் வாக்குகள் உள்ளன. அந்த எண்ணிக்கையில் இருந்துதான் வாக்கு வேட்டை ஆரம்பமாகும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குரிய 69 லட்சம் வாக்குகளில் 39 லட்சம் கிடைத்தாலே ரணிலின் வெற்றி உறுதியாகிவிடும்." – என்றார்.

# கடலில் தவறி வீழ்ந்து வைத்தியர் உயிரிழப்பு

## காரைதீவில் மீண்டும் சோகம்

அம்பாறை, காரைதீவைச் சொந்த இடமாகக் கொண்ட வைத்திய கலாநிதி இ. தக்சிதன் உகந்தைமலை முருகன் ஆலயத்தில் இருந்து வருகின்ற வழியில் பாணமை கடலில் தவறி வீழ்ந்து நேற்று சனிக்கிழமை இரவு இறந்துள்ளார்.

இவர் கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றி வந்தவர். கணித பாட முன்னாள் உதவிப் பணிப்பாளர் எஸ். இலங்கநாதனின் மூத்த புதல்வன் ஆவார்.

இவருடைய சடலம் மரண பரிசோதனைக்காக பாணமை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் இருந்து இம்முறை மருத்துவத்துறைக்குத் தெரிவான காரைதீவைச் சேர்ந்த சிவகரன் அக்சயன் (வயது 20) என்ற மாணவன் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை, லகுகல கடலில் தவறி வீழ்ந்து இறந்த சோகத்தில் இருந்து மீளாத காரைதீவு மக்களுக்கு மற்றுமொரு பேரிழப்பை இந்த வைத்தியரின் இழப்பு ஏற்படுத்தியுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதனால் பொது வேட்பாளர் திட்டத்தைஆதரிக்கும்ஓரிருவர்தங்கள்நிலைப்பாட்டை கூட்ட அறிக்கையில் பதியக் கேட்டமையுடன் அடங்கிவிட்டனர்.

ஆனால் இன்றைய கூட்டத்தில் அந்தக் கருத்தை வலிமையாக முன்வைக்கும் திட்டம் அவர்களுக்கு இருப்பதாக ஒரு வட்டாரம் தெரிவித்தது.

எனினும், தமிழ் ஊடகம் ஒன்றுக்கு தமிழரசின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் நேரடியாக வழங்கிய செவ்வி ஒன்று இன்று காலை பிரசுரமாக இருப்பதாகத் தெரிகின்றது.

பொது வேட்பாளர் விடயத்துக்கும் சம்பந்தனின் இறுக்கமான பதில் அதில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்று காலை மத்திய குழு கூடும் போது சம்பந்தனின் அந்தச் செவ்வி கூட்ட உறுப்பினர்கள் மத்தியில் வெளியாகி ஊடுருவி இருக்கும். அதனால் பொது வேட்பாளர் சார்பு நிலைப்பாடு இன்று கூட்டம் ஆரம்பிக்க முன்னரே நீர்த்துப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கட்சிக்கு எதிரான வழக்குத் தொடர்பில் இன்றைய கூட்டத்தில் அதிகம் பேசுவதற்கு விடயம் இருக்காது என்றே நினைக்கிறேன். அடுத்த மாதம், அடுத்த வழக்கு தவணையின் பின்னர்தான் அதில் ஏதும் முன்நகர்வுகளை எதிர்பார்க்க முடியும்.

+ + +

நரேந்திர மோடியின் புதிய அரசில் மீண்டும் வெளிவிவகார அமைச்சர் பதவியை ஏற்றிருக்கும் ஜெய்சங்கர் வரும் இருபதாம் திகதி கொழும்பு வருகின்றார் என ஒரு செய்தி வட்டாரம் தெரிவித்தது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான ஏற்பாடுகள் களைகட்டி உள்ள இந்தச் சமயத்தில் இந்திய வெளியுறவு அமைச்சரின் விஜயம் முக்கியத்துவம் பெறுகின்றது. அதைவிட இந்தப் பயணத்தின் போது இலங்கையில் அவர் யார், யாரைச் சந்திக்கப் போகின்றார் என்பது மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறும் எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

தமிழர் தரப்பில் அவர் யாரையும் சந்திப்பாரா அல்லது வினையே வேண்டாம் என்று தமிழ் பிரதிநிதிகளை சந்திக்காமல் அவர் தவிர்த்து விடுவாரா என்பவை அடுத்து வரும் தினங்களில் தெரியவரும். பொறுத்திருந்து பார்ப்போம்.

## பொதுவேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வருகின்றன என்று கூறப்படுகின்றன.

ஆனால், என்னைப் பொறுத்த வரையில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது அவசியமில்லை என்றே நினைக்கின்றேன். அந்த முயற்சியானது தமிழ் மக்களுக்குப் பயனற்றது மாத்திரமல்ல அது பாதிப்பையே ஏற்படுத்தும்.

உண்மையில் தமிழ் மக்களுக்கு நீண்டகாலமாக இருந்து வருகின்ற பிரச்சினைகளைத் தீராப் பிரச்சினைகளாக வைத்திருப்பதற்கான ஒரு முயற்சியாகவே இதனை நான் பார்க்கின்றேன்.

இவர்கள் எல்லோரையும் உருளைக் கிழங்கைப் போல் மூடையில் ஒன்றாகக் கட்டி வைத்திருந்தாலும் இன்றைக்கு பிரபாகரன் இல்லாத சூழலில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசைக்கு உருண்டோடியது போன்று சிதறுப்பட்டு இருக்கின்றனர்.

இவ்வாறான நிலைமையில் இவர்களுக்குள் ஐக்கியம், ஒற்றுமை எங்கே இருக்கின்றது? பல வருடங்களாக இப்படி கட்டி வைத்து என்ன கிடைத்தது? அழிவைக் கட்டுப்படுத்த முடிந்ததா? அல்லது முன்னேற்றம் ஏதும் வந்ததா? ஒன்றும் இல்லாத நிலையில் இப்போது தேர்தல் வருகின்றபடியால் மீண்டும் அதைப் பற்றிப் பேசுகின்றனர்.

எம்மைப் பொறுத்தவரையில் இவர்களைப் போன்று அல்லாமல் கடந்த காலங்களில் நாம் மக்களுக்கு எதைக் கூறினோமே அதனையே இப்போதும் கூறுகின்றோம். ஆக சொல்வதைச் செய்வதும் செய்வதைச் சொல்வதும்தான் நான். எனவே, எங்களை நம்பி மக்கள் எம்மோடு பயணிப்பதன் ஊடாக பல்வேறு விடயங்களைப் பெற்றுக்கொடுக்க முடியும்." – என்றார்.

காணி விற்பனைக்கு
சண்டிலிப்பாய் ஐயனார் கோயில் வீதியில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு
0779234825



# We are HIRING
# Front Office Executive

## CANDIDATE PROFILE

- Passed GCE A/L
- Strong interpersonal and communication skills.
- Excellent telephone etiquette and knowledge.
- Hands-on experience in front desk operations
- Basic computer literacy (MS Office packages)
- Outgoing personality
- Certificate / Diploma in Business Administration or a similar field will be an added advantage.

**Walk-in-interview on 22-06-2024**
between10.00 am to 12.00 noon





**IIS CITY CAMPUS**
No-655, Navalar Road, Jaffna.
021 222 8060 | 077 666 0054 | www.iis.edu.lk

IIS CITY CAMPUS





Build Your **Dream Home** with us....

**NORTH WALL**
ENGINEERING
"Experience a professional service like no other"

Our Services:
- Architectural Designing
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
**0777 818 208 / 0774 002 766**

Nelliyady, Jaffna.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## களம் இறங்குவாரா ரணில்?

நாட்டின் அடுத்த ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கு இன்னும் மூன்றரை மாதங்கள் - சுமார் 110 நாள்கள் - இருக்கின்றன.

ஆனால் நாட்டின் தற்போதைய அதிபர் ரணில் விக்கிரமசிங்க இந்தத் தேர்தலில் இறங்குவதா, இல்லையா என்று தெரியாத தடுமாற்றத்தில் இருக்கின்றார்.

ஏற்கனவே இரண்டு தடவைகள் சந்திரிகாவிடமும் மஹிந்தவிடமும் இதே தேர்தலில் தோற்றவர் ரணில் விக்கிரமசிங்க. இரண்டு தடவைகள் பொது வேட்பாளர்களுக்காகவும் ஒரு தடவை தனது கட்சியின் கனிஷ்ட தலைவர் ஒருவருக்காகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாமல் விலகி நிற்கும் இக்கட்டை எதிர்கொண்டவர்.

ஐந்து ஜனாதிபதி தேர்தல்கள் அவரின் நேரடிப் பங்களிப்போடு அவரைத் தாண்டிப் போய்விட்டன.

இப்போது கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடித் தப்ப வேண்டிய நெருக்கடி வந்தமையால் பரிசாக அவருக்கு இந்த ஜனாதிபதிப் பதவி கிட்டியுள்ளது.

இந்த இரண்டு வருடத்துக்குள் நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள்ளும் மூச்சு விட வைத்தமை மூலம் ஆட்சி செய்யும் சூத்திரம் - அறிவு - தெரிந்தவர் என்ற பெயரை அவர் ஈட்டி இருக்கின்றார் என்பது உண்மைதான்.

அடுத்த முறை தேர்தலில் வெல்ல முடியாது என்றால், இப்போது ஈட்டிய நல்ல பெயரோடு அரசியலில் இருந்து ஒய்வு பெறுவதுதான் தனக்கு உயர்ந்த கௌரவமாக இருக்கும் என்று அவர் கருதுகின்றார். அது உண்மையும் கூட.

அதனால்தான் ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் மூன்றரை மாதங்களே இருக்கும் இந்த நெருக்கமான நிலை வந்தும், தேர்தலில் இறங்குவேன் என உறுதியாக அறிவிக்காமல் அவர் இழுத்தடித்துக் கொண்டு இருக்கின்றார்.

வெற்றிக்கான வாய்ப்புகள் உறுதியானால் மட்டுமே அவர் களமிறங்குவார் என்பது அவரது நிலைப்பாடு என்றே தெரிகின்றது. அதற்காக மூன்று விடயங்களை அவர் எதிர்பார்க்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

ஒன்று - அவரது ஐ.தே.கட்சியில் இருந்து பிரிந்து போய் ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கிய தரப்பிலிருந்து இருபதுக்கும் குறையாத எம்.பிக்கள் ஆரவாரத்தோடு தமது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இணைய வேண்டும் என அவர் எதிர்பார்க்கின்றார்.

அடுத்தது - அவர் பொது வேட்பாளராக தேர்தலில் களமிறங்குவதற்கு, இப்போது அரசு அமைத்திருக்கும் கட்சியான பொதுஜன பெரமுன தனது வேட்பாளர் ஒருவரையும் களம் இறக்காமல், வெளியில் இருந்து பொது வேட்பாளரான தன்னை ஆதரிக்க வேண்டுமென அவர் காத்திருக்கின்றார்.

மூன்றாவது - இந்தப் பின்புலத்தில் சிறுபான்மையினரான வடக்கு கிழக்கு தமிழர்களினதும், மலையகத் தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் பிரதான கட்சிகள் தம்மை ஆதரிக்கின்ற நிலைப்பாட்டை எடுப்பது அவசியம் என அவர் கருதுகின்றார்.

இந்த மூன்றுக்குமான சூழல் கருக்கட்டி வந்தால் மட்டுமே ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் இறங்கும் தனது முடிவை அறிவிப்பார் என்று கொழும்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

இன்றைய நிலையில் தப்பித்தவறி இரண்டாவது, மூன்றாவது எதிர்பார்ப்புகளுக்கு வாய்ப்பு இருந்தாலும் முதலாவது விடயம் சரிவராது என்றே தெற்குச் செய்தி வட்டாரங்கள் அடித்துக் கூறுகின்றன.

ஐக்கிய மக்கள் சக்தியில் ராஜித சேனாரத்ன போன்ற ஒரிருவர் ஜனாதிபதி ரனில் பக்கம் சாய்ந்தாலும், அதை ஈடு கட்டுவது போல மொட்டுக் கட்சியில் வென்று, நாடாளுமன்றத்துக்குச் சென்று, இப்போது அந்த கட்சியிலும் வெளியில் குழுக்களாகவும் இருக்கும் சிலர் ஐக்கிய மக்கள் சக்தி பக்கம் பாயத் தயாராக இருக்கின்றனர் என்று தெரிகின்றது.

இதனைத்தான் "இங்கிருந்து (ஐக்கிய மக்கள்சக்தியிலிருந்து) யாரும்போனால் அங்கிருந்து ஆள்கள் வருவார்கள்" - என்று யாழ்ப்பாணத்தில் வைத்து சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டிருந்தார்.

ரணில் இத்தேர்தலில் போட்டியிடுவார் என்று இப்போது பிற தரப்புகளால் ஆரவாரப்படுத்தப்பட்டாலும் அதற்கான வாய்ப்புகள் அருகி வருகின்றன என்றே தோன்றுகின்றது.



# உத்தராகண்ட்டில் வாகன விபத்து: 12 பேர் பலி, 14 பேர் படுகாயம்

இந்தியாவின் உத்தரகாண்ட் மாநிலத்தில் இடம்பெற்ற விபத்தில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். 14 பேர் காயமடைந்துள்ளனர்.

உத்தரகாண்ட் மாநிலத்தின் ருத்ரபிரயாக் மாவட்டத்தில் நேற்று இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

ஆலய வழிபாட்டிற்குச் சென்று கொண்டிருந்தவர்கள் பயணித்த சுற்றுலா வான் ஒன்று ஆற்றில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்து இடம்பெற்றவேளை 24 பேர் அந்த வானில் பயணித்துள்ளனர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில், விபத்தில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு விமானம் மூலம் டில்லி எய்ம்ஸ் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் நால்வரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதென வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா இரங்கல் தெரிவித்துள்ளார்.

அத்துடன், காயமடைந்தவர்களுக்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படும் எனவும் அவர் தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் விபத்து தொடர்பாக துரித விசாரணைகளை முன்னெடுக்குமாறு உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி உரிய தரப்பினருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.



# எடியூரப்பாவை கைது செய்ய கர்நாடக உயர் நீதிமன்றம் தடை

கர்நாடகா முன்னாள் முதல்வர் எடியூரப்பாவை துஷ்பிரயோக வழக்கில் கைது செய்ய கர்நாடக உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

கர்நாடகாவில் தனது 17 வயது மகளை முன்னாள் முதல்வர் எடியூரப்பா துஸ்பிரயோகம் செய்தார் என அவரது தாயார் கடந்த பிப்ரவரி 2 ஆம் திகதி புகார் அளித்தார். இந்த புகாரின்பேரில் சதாசிவ நகர் பொலிஸார் எடியூரப்பா மீது போக்சோ சட்டம் மற்றும் இந்திய தண்டனை சட்டம் 354 பிரிவின்கீழ் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த நிலையில், புகார்தாரர் கடந்த மே 25 ஆம் திகதி உயிரிழந்தார். சிறப்பு புலனாய்வு பிரிவு பொலிஸார் 12 ஆம் திகதி எடியூரப்பாவை விசாரணைக்கு ஆஜராக அழைப்பாணை அனுப்பினர். ஆனால், அவர் ஆஜராகவில்லை.

எடியூரப்பா கர்நாடக உயர் நீதி மன்றத்தில் முன் பிணை கோரி மனு தாக்கல் செய்தார். இந்த மனு நேற்று முன்தினம் நீதிபதி கிருஷ்ணா எஸ் தீட்ஷீத் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது. நீதிபதி கிருஷ்ணா எஸ் தீட்ஷீத், "சி.ஐ.டி. பொலிஸார் எடியூரப்பாவை கைது செய்யக்கூடாது. அவர் பொலிஸாரின் விசாரணைக்கு முறையாக ஒத்துழைக்க வேண்டும். ஜுன் 17 இல் ஆஜராக வேண்டும்" என உத்தரவிட்டார்.

# இந்தியாவின் தேர்தல் முடிவுகள் ஜனநாயக உலகத்துக்கான வெற்றி

## ஜி7 மாநாட்டில் பிரதமர் மோடி உரை



இந்தியத் தேர்தல் முடிவுகள் ஒட்டுமொத்த ஜனநாயக உலகத்துக்கான வெற்றி என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

50 ஆவது ஜி7 உச்சிமாநாடு இத்தாலியின் அபுலியாவில் நடைபெற்றது. இந்த மாநாட்டின் உறுப்பு நாடுகளாக கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை உள்ளன. அல்ஜீரியா, அர்ஜென்டினா, பிரேசில், இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் சிறப்பு அழைப்பாளர்களாக இந்த மாநாட்டில் பங்கேற்றன.

இந்த அழைப்பை ஏற்று பிரதமர் மோடி மாநாட்டில் கலந்து கொண்டார். மாநாட்டில் பிரதமர் மோடி உரையாற்றுகையில்,

"தொழில்நுட்ப வளர்ச்சியானது ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். ஏஐ தொழில்நுட்பம் வெளிப்படைத்தன்மையுடனும், பாதுகாப்புடனும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்" என்று கூறினார்.

ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தல் அண்மையில் நடந்தது. விரைவில் பிரான்ஸ், பிரிட்டன, அமெரிக்கத் தேர்தல்கள் வரவுள்ளன. இதனை மேற்கோள்காட்டிப் பேசிய பிரதமர் மோடி, "இந்திய மக்கள் தேர்தலில் வரலாற்று வெற்றி கொடுத்துள்ளனர். அவர்கள் அளித்த அந்த ஆசிர்வாதம் ஜனநாயக உலகத்துக்கான வெற்றி." என்றார்.

இந்த மாநாட்டை ஒட்டி பிரதமர் மோடி இத்தாலி பிரதமர் மெலோனி, பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஜப்பான் பிரதமர் கிஷிடா, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி உள்ளிட்ட பலரையும் சந்தித்துள்ளனர்.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடனான பிரதமர் மோடியின் சந்திப்பு குறித்து வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், "மூன்றாவது முறையாக பிரதமராகப் பதவியேற்றுள்ள தமக்கு வாழ்த்து தெரிவித்த உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கிக்கு நரேந்திர மோடி நன்றி தெரிவித்தார்.

இரு தலைவர்களும் நடத்திய பயனுள்ள பேச்சு வார்த்தையின் போது இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்து விவாதிக்கப்பட்டது. உக்ரைன் நிலவரம் குறித்தும், சுவிட்சர்லாந்தில் நடைபெறவுள்ள அமைதிக்கான உச்சி மாநாடு குறித்தும் இரு தலைவர்களும் கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

பேச்சுவார்த்தை மற்றும் இராஜிய ரீதியிலான நடைமுறைகள் மூலம் உக்ரைன் மோதலுக்கு அமைதியான முறையில் தீர்வு காண்பதை இந்தியா தொடர்ந்து ஊக்குவித்து வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

அமைதித் தீர்வுக்கு தனது சக்திக்குட்பட்ட அனைத்து விஷயங்களையும் இந்தியா தொடர்ந்து செய்யும் என்று பிரதமர் நரேந்திர மோடி மீண்டும் உறுதியளித்தார். இரு தலைவர்களும் தொடர்ந்து தொடர்பில் இருக்க ஒப்புக்கொண்டனர்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பாப்பரசரை சந்தித்தார் பிரதமர் நரேந்திர மோடி

இத்தாலியில் நடைபெற்ற "ஜி7" மாநாட்டில் பங்கேற்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி புனித போப் பிரான்சிஸை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பின்போது போப்பை கட்டித்தழுவ பிரதமர் மோடி மறக்கவில்லை.

அத்துடன், போப்பை இந்தியாவுக்கு வாருங்கள் என்றும் பிரதமர் மோடி அழைப்பு விடுத்துள்ளார்.

நோயுற்ற போதிலும் போப் இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார் என வத்திக்கான் கூறுகிறது.

ஜி 7 உச்சி மாநாடு இத்தாலி, புகலியாவில் ஜூன் 13 ஆம் திகதி முதல் ஜூன் 15 ஆம் திகதி வரை நடைபெற்றது.

பிரதமராக மூன்றாம் முறை தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் மோடியின் முதல் வெளிநாட்டு பயணம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# அமைதி பேச்சுவார்த்தைக்கு தயாராகிறார் விளாடிமிர் புடின்



ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் நீண்ட நாள்களாக நடைபெற்று வரும் நிலையில், உடனடியாக போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டு அமைதி பேச்சுவார்த்தை நடத்தப்படும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய வெளியுறவு அமைச்சகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ரஷ்யாவினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நான்கு பிராந்தியங்களில் இருந்து உக்ரைன் தனது துருப்புக்களை விலக்கினால் அது நேட்டோ உறுப்புரிமைக்கான திட்டங்களைக் கைவிடத் தயாராக உள்ளது என எடுத்துக்கொள்ளப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும், உக்ரைன் தனது நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால், தாமதமின்றி பேச்சுவார்த்தைகளை தொடங்க தயாராக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும், உக்ரைனிடம் நிபந்தனைகளையோ கோரிக்கைகளையோ புட்டினால் முன்வைக்க முடியாது என்றும் அவரால் தொடங்கப்பட்ட போரை அவரே முடிவுக்கு கொண்டு வர வேண்டும் எனவும் அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லாயிட் ஆஸ்டின் வலியுறுத்தியுள்ளார்.

# புடினின் போர் நிறுத்த ஒப்பந்தத்தினை நம்ப முடியாது என்கிறார் ஜெலென்ஸ்கி

புடினின் போர் நிறுத்த ஒப்பந்தத்தை நம்ப முடியாது என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

உக்ரைன் மீது ரஷ்யா கடந்த 2022 ஆம் ஆண்டு போரை தொடங்கிய நிலையில் நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைய முயற்சித்ததால் அந்நாடு மீது ரஷ்யா போர் தொடுத்தது.

இப்போர் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நீடித்துக் கொண்டிருந்த நிலையில் இதில் உக்ரைனின் சில பகுதிகளை ரஷ்ய படைகள் கைப்பற்றின.

இதற்கிடையே, உக்ரைனுடன் போரை நிறுத்திவிட்டு பேச்சு வார்த்தை நடத்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இரண்டு நிபந்தனைகளை விதித்துள்ளார்.

அத்தோடு, ஆக்கிரமிக்கப்பட்ட நான்கு பிராந்தியங்களில் இருந்து உக்ரைன் தனது படைகளை திரும்ப பெற வேண்டுமெனவும் நேட்டோவில் சேருவதற்கான திட்டத்தை கைவிட வேண்டுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் உடனடியாக போரை நிறுத்துவதுடன் அமைதி பேச்சுவார்த்தையில் ஈடுபட ரஷ்யா தயாராக இருப்பதாக புடின் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், புடினின் குறித்த போர் நிறுத்த ஒப்பந்தத்தை நம்ப முடியாதென ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், “புடின் தெரிவித்துள்ள போர் நிறுத்த கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டாலும் அவர் தனது இராணுவ தாக்குதலை நிறுத்த மாட்டார்.

அவரது போர் நிறுத்த ஒப்பந்தம் ஒரு இறுதி எச்சரிக்கை ஆகும் இந்த ஒப்பந்தத்தை நம்ப முடியாது அத்தோடு ஹிட்லர் செய்த அதே விஷயத்தை புடின் செய்கின்றார்.

இதனால் அவர் கூறும் யோசனையை நாம் நம்பக்கூடாது. என அவர் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு ஊழியர்களுக்கு ஜப்பானில் நிரந்தர குடியுரிமை



வெளிநாட்டு ஊழியர்களுக்கு நிரந்தர குடியுரிமையை வழங்க ஜப்பான் அரசு தீர்மானித்துள்ளது.

அதன்படி, வெளிநாட்டு ஊழியர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் தொழில்நுட்ப வேலைவாய்ப்புப் பயிற்சித் திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், திருத்தப்பட்ட புதிய சட்டம் 2027 முதல் ஜப்பானில் நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு ஊடக அறிக்கைகளின்படி குடிவரவு கட்டுப்பாடு மற்றும் அகதிகளை அடையாளம் காணும் முந்தைய அடிப்படைகளும் திருத்தப்பட்டுள்ளன.

மூன்று ஆண்டுகளுக்குள் திறமையான தொழிலாளர்களாக ஜப்பானில் பணிபுரிய வெளிநாட்டவர்களுக்கு பயிற்சி அளிப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

மேலும், மருத்துவம், கட்டுமானம் மற்றும் விவசாயம் போன்ற தொழிலாளர் பற்றாக்குறை உள்ள பல துறைகள் இதில் உள்ளடங்கியுள்ளன.

அதற்கமைய புதிய சட்டத்தின் கீழ் ஜப்பானில் நிரந்தர வதிவிட அனுமதி பெற்ற வெளிநாட்டு தொழிலாளர்கள் அரசாங்கத்திற்கு வரி மற்றும் பிற கொடுப்பனவுகளை வேண்டுமென்றே செலுத்தத் தவறினால் அவர்களின் நிரந்தர வதிவிடம் இரத்துச் செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# ஜனாதிபதித் தேர்தல்: மும்முனைப் போட்டிக்களமா?



புருஜோத்தமன் தங்கமயில்

ஜனாதிபதித் தேர்தல் இம்முறை வழக்கத்துக்கு மாறாக மும்முனைப் போட்டிக்களத்தினை திறந்திருப்பதாக தென் இலங்கையில் கருத்துருவாக்கம் செய்யப்படுகின்றது. அதனை, வடக்கு –கிழக்கின் அரசியல், சிவில், ஊடக வெளியும் உள்வாங்கி பிரதிபலிக்க ஆரம்பித்திருக்கின்றது. தமிழ்ப் பொது வேட்பாளர் கோசத்தோடு அரங்கிற்கு வந்திருப்பவர்கள், அந்த அடிப்படையை வைத்துக் கொண்டுதான் தங்களின் அரசியல் கணக்கினை போடுகிறார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க ஆகியோருக்கு இடையிலான போட்டி என்பது, வழக்கமான ஜனாதிபதித் தேர்தலைக் காட்டிலும் நெருக்கமான நெருக்கடியான போட்டியாக இருக்கும் என்று நம்புகிறார்கள். குறிப்பாக, எந்தவொரு வேட்பாளரினாலும் ஜனாதிபதி பதவியை அடைவதற்கான 50 வீதத்துக்கு அதிகமான வாக்குகளைப் பெற முடியாது என்று வாதிடப்படுகின்றது. ஆனால், தேர்தல் களம் உண்மையில் அப்படித்தானா இருக்கின்றது?

ஒக்டோபர் முதல் வாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என்று ரணிலுக்கு நெருக்கமான தரப்பினர் செய்திகளை கசிய விட ஆரம்பித்திருக்கிறார்கள். அப்படிப் பார்த்தால் இன்னும் மூன்றரை மாதங்கள் மாத்திரமே ஜனாதிபதித் தேர்தலுக்கு இருக்கின்றது. தென் இலங்கையில் சஜித்தும் அநுரவும் ரணிலை விட ஆதரவுத் தளத்தோடு இருக்கிறார்கள். இந்த உண்மை யாருக்குத் தெளிவாகத் தெரியுமோ இல்லையோ, ரணிலுக்கும் அவரைத் தாங்கி பிடித்துக் கொண்டிருக்கும் ராஜபக்ஷக்களுக்கும் நன்றாகவே தெரியும். ராஜபக்ஷக்கள் மக்களால் துரத்தியடிக்கப்பட்ட போது, தங்களுக்கு மாற்றாக ரணிலை அதிகாரத்தில் இருத்தித் தங்களின் எதிர்கால அரசியலுக்கான வழிகளைக் காத்துக் கொள்வதில் ராஜபக்ஷக்கள் கவனமான இருந்தார்கள். ஆனால், தொடர்ச்சியாக ரணிலை தாங்கிப் பிடிப்பது என்பது தசாப்த காலத்துக்கும் மேலாக தங்களை தென் இலங்கையின் அரசியல் களத்தில் இருந்து ஒதுக்கி வைத்துவிடும் என்பது இளைய ராஜபக்ஷவான நாமலுக்கு இருக்கின்ற பெரிய சந்தேகம். ரணிலை இனி எந்த இடத்திலும் ஆதரிக்க வேண்டியதில்லை என்று அவர் எண்ணிச் செயற்படுகிறார்.அவரின், இப்போதைய அவசரமான அரசியல் ஆசை என்பது அடுத்த பொதுத் தேர்தலில் எப்படியாவது பிரதான எதிர்க்கட்சியாக பொதுஜன பெரமுனவை அமர்த்திவிட வேண்டும் என்பதுதான். அதுதான், 2029இல் ஆட்சியைப் பிடிக்க உதவும் என்றும் நாமல் கருதுகிறார். அதனைக் கருத்தில் கொள்ளாமல், சிரேஷ்ட ராஜபக்ஷக்களில் ஒருவரான பஸிலில் ராஜபக்ஷ ரணிலோடு சேர்ந்து தென்னிலங்கையை வளைத்துவிடலாம் என்று நம்புகிறார். அதனால் தான், தொடர்ச்சியாக கடந்த காலத்தில் ராஜபக்ஷக்களுக்காக வரிந்து கட்டிக் கொண்டு பிரச்சாரம் செய்த தென்னிலங்கையின் பிரதான ஊடகங்கள் எல்லாமும் தற்போது ரணிலை, நாட்டினை வீழ்ச்சியிலிருந்து மீட்ட இரட்சகர் என்று கூறத் தலைப்படுகின்றன.

ரணில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்துக்கு வந்ததில் இருந்து, அவரைத் தென் ஊடகங்கள் மேற்கு நாடுகளின் விசுவாசி என்றும், ஆட்சியைப் பிடிப்பதற்கு ஆளுமையற்ற மேட்டுக்குடி என்றுமே சித்திரித்து வந்திருக்கின்றன. தென்னிலங்கைக் கிராமங்களில் பௌத்த, சிங்களத்தைக் காப்பதற்கு மன்னர் போன்றவர் ஒருவரே ஜனாதிபதியாக வர வேண்டும். அவருக்கு வாரிசுகள் இருக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்யப்படுவதுண்டு. அதுதான், ராஜபக்ஷக்களை அரியணையில் மீண்டும் மீண்டும் ஏற்றியது. இப்போதும் அவர்களினால் மிக வேகமாக வீழ்ச்சியில் இருந்து மீள எழுவதற்கும் இவ்வாறான உணர்நிலையே முக்கிய காரணமாகும். வாரிசு அரசியல் என்பது ஊழல், அதிகார துஷ்பிரயோகத்தின் உறைவிடம் என்பது உலகம் தொடர்ச்சியாக நிரூபித்து வரும் விடயம். இலங்கையும் அதற்கு விதிவிலக்கானது அல்ல. அதன் பாதிப்புக்களை மக்கள் ஒவ்வொரு நாளும் எதிர் கொண்டாலும் அதனைச் சகித்துக் கொண்டு வாரிசுள்ள தலைவர்கள் தங்களை ஆள வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதாவது, ஆண்டான் அடிமை மனநிலையில் இருந்து மக்கள் மீளவில்லை. இதனை நாமல் உணர்ந்து வைத்திருக்கின்றார். ஆனால், பஸிலுக்கு இருந்த ஜனாதிபதிப் பெருங்கனவில் கடந்த முறை கோட்டாபய ராஜபக்ஷ குறுக்காக வந்தார். 2029ஆம் ஆண்டு நடைபெறும் தேர்தலில் தன்னை ஜனாதிபதி வேட்பாளராக பெரமுனவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் முன்னிறுத்த மாட்டார்கள். அந்தத் தேர்தலுக்கு நாமல் தயாராகிவிடுவார். அதனால், இம்முறை ரணிலை ஜனாதிபதியாக்கினால், அவரைக் கொண்டு பிரதமர் பதவியையாவது அடைந்துவிடலாம் என்ற ஏக்கம் பஸிலுக்கு உண்டு. அதனால்தான், ரணிலும் பஸிலும் ஓர் இரகசிய இணக்கப்பாட்டின் அடிப்படையில் இணைந்து இப்போது வேலை செய்கிறார்கள்.

பஸிலுக்கும் நாமலுக்கும் இடையில் நின்று மஹிந்த

தொடர்ச்சி▼







# ஜனாதிபதித் தேர்தல்: மும்முனைப் போட்டிக்களமா?

தொடர்ச்சி▲

ராஜபக்ஷ் தற்போது தத்தளிக்கின்றார். அவருக்கு எப்படியாவது பெரமுனவை எந்தவித சேதாரமுமின்றி மகனிடம் கைளித்துச் செல்ல வேண்டும் என்பது அவா. ஆனால், அதற்கு குறுக்காக இளைய சகோதரர் நிற்பதை எப்படி கையாள்வது என்ற குழப்பம். ஏற்கனவே இன்னொரு இளைய சகோதரரான கோட்டா, ராஜபக்ஷ க்களின் பெயரையே நடுவீதிக்கு இழுத்துவிட்டு நாசமாக்கிவிட்டார் என்பது மஹிந்தவின் பெரும் கவலை. தற்போது வயது மூப்பு, அதனால் வரும் தொல் லைகளினால் அவர் அல்லாடுகிறார். இந்த நெருக்கடிகளுக்குள்ளும், தன்னுடைய வாரிசின் எதிர்கால அரசியல் வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொடுக்க வேண்டும் என்ற பெரும் கவலை வேறு. மஹிந்தவுக்கும் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அக்கறை காட்டாமல் பொதுத் தேர்தலை இலக்கு வைத்து செயற்பட்டு, பிரதான எதிர்க்கட்சியாகிவிட வேண்டும் என்பதுதான் எதிர்பார்ப்பு. ஆனால், பஸில் இடையில் நின்று குழப்பிக் கொள்வதுதான் அவரின் தற்போதைய தலையிடி. ஏனெனில், பஸில் நினைத்துவிட்டால் பெரமுனவை இரண்டாக உடைத்துவிடும் (பண) பலம் உள்ளவர் என்பது தமையனாருக்கு நன்றாகத் தெரியும். கடந்த காலங்களில் ராஜபக்ஷக்களின் வெற்றிகளில் பஸிலின் பங்கு கணிசமானது.

தற்போதுள்ள நிலையில் சஜித் ஆட்சியைப் பிடிப் பதற்கான வாய்ப்புக்களே இருக்கின்றன. ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு கிழக்கில் குழப்பங்கள் இன்றி வாக் களிப்பு நிகழ்ந்தால், சஜித்தின் வெற்றியை தடுப்பதற்கு எந்தக் காரணிகளும் பெரிதாக இல்லை. அவர் பொதுத் தேர்தலிலும் ஆட்சியமைப்பதற்கான உறுப்பினர்களை கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு பெற்றுவிடுவார். ஆனால், தென்னிலங்கையில் தேசிய மக்கள் சக்தி தன்னை வளர்ந்துவரும் பிரதான சக்தியாக முன்னிறுத்திக் கொண்டிருக்கின்றது. மக்கள் விடுதலை முன்னணியின் கடந்த கால கறுப்புப் பக்கங்களைப் புலமையாளர்கள், கலைஞர்கள், முன்னாள் பாதுகாப்பு அதிகாரிகளைக் கொண்டு தேசிய மக்கள் சக்தியாக நின்று மறைத்து விடலாம் என்று அநுர கருதுகிறார். வழக்கத்துக்கு மாறாக தென்னிலங்கையின் சிறுநகரங்களிலும் பெரு நகரங்களிலும் தேசிய மக்கள் சக்தியை நோக்கிய திரட்சி இருக்கின்றது. அது, ஆளுங்கட்சியாக மாறுவதற்கான அளவுக்கு இல்லை. ஆனால், முயற் சித்தால் ராஜபக்ஷக்களை வீழ்த்தி பிரதான எதிர்க் கட்சியாகும் வாய்ப்புக்களைக் காட்டுகின்றது. இதில், தேசிய மக்கள் சக்தியின் பிரதான பின்னடைவு என்றால், அவர்களின் பின்னால் தமிழ் – முஸ்லிம் கட்சிகள் எவையும் அணி திரள்வதில்லை என்பது. இதனால், வடக்கு, கிழக்கிலும் மலையகத்திலும் தேசிய மக்கள் சக்தியினால் வாக்குகளைப் பெற முடியாது. இந்தப் பின்னடைவுகளோடு இருக்கும் தேசிய மக்கள் சக்தியை ஊடகங்கள் ஊதிப்பெருப்பித்து பிரமாண்டமாவே காட்டிக் கொண்டிருக்கின்றன. அது, ரணிலுக்கான வாய்ப்புக்களை உருவாக்கும் நோக்கிலானது என்று கொள்ளப்பட வேண்டியது.

கடந்த காலத்திலும் தேசிய மக்கள் சக்தி அளவுக்கு பொதுக் கூட்டங்களை எந்தவொரு கட்சியினாலும் பிரமாண்டமாக நடத்த முடிந்திருக்கவில்லை. ஆனால், அந்தப் பொதுக்கூட்டங்களின் கூடிய மக்களின் வாக்குகள், அந்தக் கட்சிக்கு கிடைத்திருக்கின்றனவா என்றால், அது எதிர்மறை பதில்களையே வழங்கும். அந்தக் கட்சியின் பிரமாண்டமான வெற்றி என்பது, 2004ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கிடைத்தது. அந்தத் தேர்தலில், சுதந்திரக் கட்சியோடு இணைந்து மக்கள் விடுதலை முன்னணி தென்னிலங்கை முழுவதும் இனவாத பிரச்சாரத்தை முன்னெடுத்தது. ராஜபக்ஷ க்களின் ஆயுத மோதல் முன்னெடுப்புக்கு பக்க பலமாக நின்று வலுச்சேர்த்தது. போர் வெற்றிக்கான பங்கினை மக்கள் விடுதலை முன்னணியும் கோரி நின்றது. பின்னராக அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் மஹிந்தவோடு தங்கிவிட, அநுர தலைமையேற்றதும் மெல்ல மெல்ல தங்களின் மீதான கடந்த கால கறுப்பு வரலாற்றை மறைப்பதற்கான திட்டங்களோடு செயற்படத் தொடங்கினார்கள். இன்றைக்கு தேசிய மக்கள் சக்தியாக தங்களை முன்னிறுத்தி, ஜனநாயகத்தின் காவலர்களாக வலம் வருகிறார்கள்.

தேசிய மக்கள் சக்தியை பெருப்பித்து காண்பிப்பதன் மூலம், சஜித்தோடு இருப்பவர்களை கிலியுறச் செய்யலாம் என்பது ரணிலின் திட்டம். அதனைக் கொண்டு சஜித்தோடு இருப்பவர்களை எப்படியாவது தன்னோடு இணைத்துக் கொள்ளலாம் என்று ரணில் நினைக்கிறார். ஆனால், அவரின் எதிர்பார்ப்புக்கள் இதுவரை நிறைவேறவில்லை. சஜித்தின் கட்சிக்குள் அவரோடு சரத் பொன்சேகா உள்ளிட்ட சிலர் முரண்பட்டுக் கொண்டுதான் இருக்கி றார்கள். ஆனால், அவர்கள்கூட ரணில் பக்கம் சாய்வ தற்கு தயாராக இல்லை. ஏனெனில், மூழ்கும் படகில் யாரும் ஏறத் துணிய மாட்டார்கள். (கடந்த பொதுத் தேர் தலில் ரணிலும், அதன் பின்னரான அறகலய காலத்தில் ராஜபக்ஷக்களும் மூழ்கிப்போனவர்கள்தான்.) அநுரவால்

தொடர்ச்சி▼

# ஜனாதிபதித் தேர்தல்: மும்முனைப் போட்டிக்களமா?

**தொடர்ச்சி▲**

சஜித்தை தோற்கடிக்கும் வல்லமையுண்டு என்ற கற்பிதத்தைப் பேணி, சஜித்தோடு இருப்பவர்களை கலங்கடிக்கலாம் என்ற திட்டம் நினைத்த அளவுக்கு வேலை செய்யவில்லை. ஆனால், அந்த திட்டம் வடக்கு கிழக்கில் சற்று வேலை செய்திருக்கின்றது. தமிழ்ப் பொது வேட்பாளர் கோசத்தோடு வரும் சில தரப்பினர், தென்னிலங்கையில் மும்முனைப் போட்டிக் களம் விரிந்திருப்பதாக இந்தக் கற்பிதங்களை உள்வாங்கிக் கொண்டுதான் பிரதிபலிக்கிறார்கள்.

ரணில் சுயாதீன வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகிறார். அதன்மூலம், தன் பின்னால் ராஜபக்ஷக்கள் இருக்கிறார்கள் என்ற கட்டத்தைக் கடக்க முடியும் என்று நினைக்கிறார். தான் சுயாதீன வேட்பாளராக போட்டியிடுவேன், தனக்கு யார் ஆதரவளித்தாலும் அதனை ஏற்றுக்கொள்வேன் என்ற பிம்பத்தை அவர் கட்டமைக்கப் போகிறார். அதன்மூலம், ராஜபக்ஷக்கள் மீதான தென்னிலங்கையின் வெறுப்புணர்வை மடை மாற்றலாம் என்பது அவரது நினைப்பு. அத்தோடு, வடக்கு கிழக்கில், தமிழ் மக்களிடையே பொது வேட்பாளர் என்ற விடயத்தை தன்னுடைய ஆதரவு சக்திகளைக் கொண்டு திணித்தால், சஜித்துக்கு கிடைக்கும் கணிசமான வாக்குகளை இல்லாமலாக்கிவிட முடியும். அதன்மூலம், தன்னையொரு முதன்மைப் போட்டியாளராக முன்னிறுத்திக் கொள்ள முடியும் என்பது அவரது எதிர்பார்ப்பு. ஆனால், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் தமிழ் மக்களிடம் எடுபடாது. ரணில் அடுத்த தேர்தலில் போட்டியிட்டால் அவர், ராஜபக்ஷக்களின் முகமாகவே தமிழ் மக்களினால் பார்க்கப்படுவார். இருப்பதில் பாதிப்புக்குறைந்த வேட்பாளர் என்ற அடிப்படையில் சஜித்தை நோக்கி தமிழ் வாக்குகள் திரளும். முஸ்லிம் பிரதான கட்சிகள் எல்லாமும் இன்னமும் சஜித்தோடு இருப்பதால் முஸ்லிம் வாக்குகளும், மனோ கணேசன், திகாம்பரம் கூட்டணியின் வலுவோடு மலையக தமிழ் வாக்குகளும் சஜித்தின் பக்கத்தில் சேரும். இந்தக் கட்டமே, சஜித்தை முன்னிலையில் வைத்துக் கொள்ளப் போதுமானது.

ஆனால், சஜித்துக்கு இருக்கும் பெரும் சிக்கலே சஜித்தான். நேரம் காலம் அறியாமல் ஏதும் அறியாக குழந்தை மாதிரி உளறிக் கொட்டி, அவருக்கு சாதகமாக இருக்கின்ற களத்தினை நாசமாக்காமல் இருக்க வேண்டும். அப்படி அவர் இருந்துவிட்டால், தென் இலங்கையில் பெரும்பான்மையான வாக்குகளும், தமிழ் – முஸ்லிம் வாக்குகளும் போதும் அவரை, வெற்றியாளராக்குவதற்கு. இதுதான் தற்போதைய நிலை. மாறாக மும்முனைப் போட்டிக்களம் என்பதெல்லாம் கற்பனை வாதம்.



# மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையில் மருந்து இன்மையால் நோயாளிகள் சிரமம்

மஹரகம அபேக்ஷா வைத்திய சாலையில் கீமோ சிகிச்சை முறைமைக்கு பயன்படுத்தப்படும் மருந்து இன்மையால் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

அந்த மருந்தை சந்தையில் கொள்வனவு செய்வதாயின், சுமார் ஒரு லட்சம் ரூபா செலவாகுமென அரச மருந்தாளர் சங்கத்தின் தலைவர் துஷார ரணதேவ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி நிதியம், நன்கொடைகள் மூலம் வழங்கப்படும் கீமோ சிகிச்சைக்கான மருந்துகள் போதுமானவையாக இல்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நீண்டகாலமாக இந்த மருந்திற்கு நிலவும் தட்டுப்பாட்டினால் தாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என நோயாளர்கள் தெரிவித்துள்ளனர்.




# ஜனாதிபதி வேட்பாளர்களும் ஜனநாயகத்திற்கு அஞ்சும் சிவில் பிரமுகர்களும்! தமிழரின் எதிர்காலம்?



வி.எஸ்.சிவகரன்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உள்ள பிரதான வேட்பாளர்கள் ஒருவர் பின் ஒருவராக வடக்கு நோக்கி வருகிறார்கள். கடந்த காலத்தில் பல வாக்குறுதிகளை வழங்கியவர்கள் அல்லது அந்த வாக்குறுதிகளை அவர்களாலே செயல்படுத்த முடியாமல் இனவாத சகதிக்குள் தம்மை உட்படுத்திக் கொண்டவர்கள். தேர்தல் காலங்களில் புனிதர் எனும் மகுடம் சூடி வாக்கு வணிகத்திற்கு வருகிறார்கள்.

வழமை போன்று தமிழ்க் கட்சிகளுடனும் அளவளாவிச் செல்கிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால் 'அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரண தேவி' என்று பொது வேட்பாளருக்குக் கங்கணம் கட்டி நிற்கும் அரசியல் கட்சிகளும் கூட ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உள்ள தெற்கு வேட்பாளர்களைச் சந்தித்து உரையாடுவதுதான்.

அதிலும் கொழும்பில் ஒரு விதமான கருத்துகளும் வடக்கில் இன்னொரு விதமான கருத்துக்களையும் முன்வைப்பது அவர்களின் இயல்பே.

தமிழ்த் தேசியவாதிகளால் நிராகரிக்கப்பட்ட 13 ஆவது திருத்தத்தையும் அதன் பிளஸையோ மைனஸையோ வழங்குகிறோம் என ஒவ்வொரு தரப்பும் மாறி மாறி தங்கள் வாக்குறுதிகளை வழங்குகின்றன. அந்த 13 கூட நடைமுறைப்படுத்தப்பட்டு விடக்கூடாது என்பது விமல் வீரவன்ஸ போன்ற தெற்கின் இனவாத சக்திகள் இப்பொழுதே வீறு கொள்ள தொடங்கிவிட்டன.

ஆகவே இந்த வேட்பாளர்கள் தங்கள் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் எதை உறுதிப்படத் தெரிவிக்கப் போகின்றனர், அவ்வாறு தெரிவித்து விட்டால் தெற்கின் இனவாத அலை எப்படி வெளிக்கிளம்பப் போகின்றது என்பவை எல்லாம் இப்போது வரைக் கேள்விக்குறியே. அப்படி தெரிவித்தவர்களால் கூட கடந்த காலத்தில் அதனை செயல்படுத்த முடியாமல் போயிற்று. தமிழ் மக்கள் பெருவிருப்போடு வாக்களித்து ஆட்சியில் அமர்த்திய மைத்திரிபால சிறிசேன அதிகாரத்துக்கு வந்ததும் என்ன செய்தார் என்பது ஆகப் பிந்திய உதாரணம்.

ஆகவே சிங்களப் பெருந்தேசிய வாத நிகழ்ச்சி நேரலோடு பயணிக்கின்ற வேட்பாளர்களால் எந்த பயனும் கிடைக்கப் போவது இல்லை என்பதுதான் மறுக்க முடியாத கடந்தகால அனுபவ உண்மை. மாறாக, தமிழ் மக்கள் என்ன தெரிவை மேற்கொள்வது? ஜனாதிபதித் தேர்தலில் ஒரு குழப்பமான அரசியல் நிலை தோன்றலாம். அதற்குள் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயமும் சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது.

சிவில் பிரமுகர்கள் சிலர் ஒன்று கூடி தமிழர் தரப்பில் பொது வேட்பாளரை நிறுத்தப் போகிறார்கள் எனச் சொல்கிறார்கள். இது எவ்வளவு தூரம் நடைமுறை சாத்தியமாகப் போகிறது என ஏலவே எனது பத்திகளில் கோடிகாட்டி இருக்கின்றேன்.

அரசியல் கட்சிகளை ஒரு நிகழ்ச்சி நிரலுக்குள் உட்படுத்தாமல் பொதுத்தளத்திலே அரசியல் முடிவுகளை எடுப்பதும், அந்த முடிவுகளை நிறைவேற்றச் செய்வது என்பதும் முற்றிலும் பொருத்தமற்ற விளைவுகயே ஏற்படுத்தும். சித்தாந்தக் கோட்பாட்டை நடைமுறைச் சாத்தியமாக்கக்கூடிய மூலோபாய தந்திரோபாயத்தை ஏற்படுத்துவதற்குரிய கால,நேர, கணக்கு,சூழல், இருப்பு, நிலை சாத்தியமா என்கின்ற கேள்விக்கு எவரிடமும் தகுந்த பதில் இருப்பதாகத் தெரியவில்லை.

எழுமாறாக இவ்விதமான முடிவுகளை அவரவர் நலன்களில் இருந்தும் ஆலோசகர்களின் தீர்மானங்களில் இருந்தும் புலம் பெயர்ந்தவர்களின் கருத்துக்களில் இருந்தும் தீர்மானமாக எடுப்பதனால் பயன் ஏற்படுமா? இறுதி முடிவுதான், தொடக்கம் சரியா,தவறா என்பதனை முடிவுறுத்தும்.

தொடர்ச்சி▼




# ஜனாதிபதி வேட்பாளர்களும் ஜனநாயகத்திற்கு அஞ்சும் சிவில் பிரமுகர்களும்! தமிழரின் எதிர்காலம்?

தொடர்ச்சி▲

அந்த முடிவு மறுதாக்கத்தை ஏற்படுத்தினால் இந்த இனத்தின் எதிர்கால இருப்பியலின் நகர்வு எதை நிர்ணயிக்கும் என்பதனை இவர்கள் ஆழமாகப் பகுத்தறிந்து சிந்திப்பது மிகப் பொருத்தமானது. உணர்வு ரீதியாகவும் இருப்பின் அடிப்படையிலும் எடுக்கப்படும் தீர்மானம் அறிவார்ந்த தளத்தில் நின்று நிதானித்து நிலை பெறக்கூடிய வலிமையை இக்கோட்பாடு வலியுறுத்துமா என்பதனை ஆராய்தல் அவசியமாகும்.

தொலைநோக்கு நிலையைப் பின்பற்ற தவறினால் இந்த இனத்தை தற்காத்துக் கொள்ளக்கூடிய எந்தவிதமான ஏது வழிகளும் இல்லாமல் போகலாம்.

எமது 'பறி போன உரிமைகளை பிச்சை எடுத்து வாங்க முடியாது.' என்கிறார் அம்பேத்கர்.

புகை வரும் போதே விழித்துக் கொள்ளாதவன் பெரும் நெருப்பைச் சந்திப்பான்.

'சுழல் வாள் எடுத்து சூழ்ச்சியை உடைத்து ரௌத்திரம் படைத்து ராஜாங்கம் நடத்து' எனும் வைரமுத்துவின் வாசகத்தை இவர்களால் நெறிப்படுத்த முடியுமா?

எனவே இலக்கில் கவனம் செலுத்தி வெற்றியை நோக்கி நகர்ந்து செல்வதே முக்கியம். இடையில் வரும் இடைஞ்சல்களில் தடைபட்டு போகக்கூடிய நிலை தோற்றம் பெற்றால் அதிலிருந்து மீள்வது எப்படி என்பதற்கான முறைமையையும் வகுத்துக் கொண்டே நகர வேண்டிய தேவை ஏற்படும். இவர்களால் முடியுமா?

சாத்தியமானதைச் செயல்படுத்துவதுதான் அரசியல். அரசியலில் – அதிலும் தேர்தல் அரசியலில் – ஒழுக்க செல்நெறி என்பது உலகம் முழுவதும் வறுமையான வார்த்தைகளே.

கருத்துக்களை கருத்துக்களுடன் மோதும் ஜனநாயக களத்தை கண்டு அஞ்சுபவர்கள் எப்படி தேர்தல் அரசியலில் வேட்பாளரை நிறுத்தி பரப்புரையை மேற்கொள்ளப் போகிறார்கள்? சிவில் சமூகம் அரசியல் இயக்கமாக மாறுகின்ற போது அதன் அடிப்படைத் தன்மையை இழந்து விடுகிறது. அரசியல் என்பது அவமானங்களின் கூடாரம். அதில் வெற்றி – தோல்வி என்பது சர்வசாதாரணம். இவற்றை ஏற்றுக்கொண்டு உணர்ந்து செயலாற்ற வேண்டியதுதான் பொது வாழ்க்கையின் மகத்துவம். 'சுறாக்கள் இல்லாத ஆழ் கடலில் நான் நீச்சல் பழகுவதில்லை' என்கிறார் நெப்போலியன்.

ஆகவே ஜனநாயகக் களத்தை எதிர்கொண்டு தங்கள் கருத்துக்களை முன்வைத்து நோக்கமும், இலக்கும், இலட்சியமும், தடுமாறாத போக்கும், தளர்வில்லாத செயல்ப்பாடும், திராணியும் இருப்பின் எந்தக் களத்தையும், எந்த மேடையையும் நாங்கள் நிராகரிக்க வேண்டிய அவசியமில்லை. பிசாசோடும் பேசிக்கொள்ளலாம். எங்கள் நிலையில் நாங்கள் எப்பொழுதும் உறுதியோடும், நிலைத்தன்மையோடும் இருந்தால் எவருக்கும் அஞ்சப்போவதில்லை. ஜனநாயக களத்தில் எவரும் வல்லவர்களும் இல்லை, எவரும் வலியவர்களும் அல்லர், எவரும் மகாவீரர்களும் அல்லர். யாவரும் சமமானவர்களே. 'நன்றாற்ற லுள்ளுந் தவறுண்டு அவரவர் பண்பறிந் தாற்றாக் கடை' என்கிறார் வள்ளுவர்.

ஜனநாயகம் என்பதே நடுநிலையற்ற ஆட்சி. அந்த ஜனநாயகக் களத்தை எதிர்கொள்ள வேண்டியதே இவர்களினுடைய தலையாய கடமை. 30 ஆண்டுகளாக அடுத்தவர்களுக்குக் கருத்து கூறி விமர்சனம் செய்து வந்தவர்கள்,மூன்றே வாரத்தில் தங்களை விமர்சிக்கும் போது, தங்கள் மீது கேள்வி எழுப்புகின்ற போது அஞ்சுவது, எதிர் விமர்சனம் செய்வது என்பது அவர்களின் இதுவரை கால எழுத்துக்களையும் விமர்சனங்களையும் கேள்விக்குட்படுத்தும். இந்த விமர்சனங்கள் எல்லாம் எழும் என்பதனை உணராமல் அவர்கள் களத்துக்கு வர முனைந்ததே அனுபவ முதிர்ச்சியற்ற செயற்பாடு.

'அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்சவருவதுமில்லை' என்ற தெளிவு ஏற்பட்டிருக்க வேண்டும். விமர்சனத்தையும் அவதூறுகளையும் தாங்க முடியாதவன் தன் இலக்கை ஒருபோதும் அடைய முடியாது. விமர்சனங்களையும், தோல்விகளையும், அவமானங்களையும் சகித்துக் கொண்டேதான் வெற்றியை நோக்கி நகர வேண்டும். அதுவே சிறந்த தலைமையின் அடையாளம். 'நல்ல பெயர் எடுக்க முயற்சிப்பவன் பொதுத் தொண்டுக்கு தகுதியற்றவன்' என்கிறார் தந்தை பெரியார். இலக்கு நோக்கி நகர்வதற்கு அறிவை விட ஆளுமையும், வல்லமையும் அனுபவமும், முன் யோசனையும், இருப்பு வாதமும், தந்திரோபாய நகர்வுகளும் அவசியமாகும். 'அரசியல் என்பது ஒரு விசித்திரமான படுக்கையறை நண்பர்களைக் கொண்டதே.' என்கிறார் ஷேக்ஸ்பியர். ஆகவே ஜனநாயகத்தில் போராடுவது என்பது ஆயுதத்தை விட அதி முக்கியத்துவம் வாய்ந்தது. அதனால்தான் இந்திய சுதந்திரத்திற்காகப் போராடிய மகாத்மா காந்தி தனது ஜனநாயகப் போராட்டம் தன்னிலை இழந்ததை அடுத்து

தொடர்ச்சி▼

# ஜனாதிபதி வேட்பாளர்களும் ஜனநாயகத்திற்கு அஞ்சும் சிவில் பிரமுகர்களும்! தமிழரின் எதிர்காலம்?

தொடர்ச்சி▲

போராட்ட களத்தை இரண்டு ஆண்டுகள் கலைத்துவிட்டு ஜனநாயகத்தில் போராடுவது எப்படி எனப் பயிற்சி கொடுத்து பின்னர் ஜனநாயகப் போருக்குப் புறப்பட்டார். 'அகிம்சை என்பது சாகப் பயந்தவனின் ஆயுதம் அல்ல. அது சாகத் துணிந்தவனின் ஆயுதம்' எனவும் அறை கூவல் விடுத்தார்.

எனவே இப்பொழுது சிவில் சமூகப் பிரமுகர்கள் எனும் நிலையை கடந்து அரசியல்வாதிகள் நிலையை அவர்கள் எட்டி விட்டனர். அதற்குத்தான் நான் ஏலவே பத்திகளில் எழுதினேன் – அரசியல் கட்சியாக மாறு வதைத் தவிர வேறு தெரிவு எதுவும் இருக்கப் போவதில்லை என்று. மீண்டும் கூறுகிறேன். உங்கள் கூட்டுக் கட்சியை சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீகாந்தா கூறியமை போல் 'அனுபவ முதிர்ச்சியற்றவர்கள்'. அதனால் இந்தக் களம் உங்களுக்குப் புதுமையாக பல பாடங்களைக் கற்பிக்க முனைகிறது.

'நூறு மலர்கள் மலரட்டும். ஆயிரம் கருத்துக்கள் முட்டி மோதட்டும்.' – என்றார் மாவோ.

ஆகவே உங்களுக்கு ஆதரவளிக்கிறோம் என்பவர்கள் கூட தேர்தல் வரைக்கும் உங்கள் கருத்தியலோடு ஒன்றிணைந்து போவார்களா என்பது மிகப் பெரிய கேள்விக்குறியே. அவர்கள் தென்னிலங்கை வேட்பாளர்களை ஆதரிக்க கூடிய ஏது நிலையே அதிகமாகக் காணப்படுகின்றன. ரணிலோடு ஒரு பகுதியும் சஜித்தோடு மற்றொரு பகுதியும் அனுரவுடன் கள்ளக்காதலும் வைத்துள்ளார்கள். ஒரு சில 'லெட்டர் பாட்' கட்சிகள் தொடரலாம். ஏனையவர்கள் தங்களுக்குஓ புற முதுகு காட்டுவார்கள் என்பதனை சில மாதங்களில் இவர்கள் புரிந்து கொள்வார்கள்.

நல்லாட்சி காலத்தில் தொல்பொருள் திணைக் களத்திற்கு அமைச்சராக இருந்த சஜித் பிரேமதாசா பிரச்சினையைத் தீர்ப்பாரா? காலத்துக்கு காலம் ஏமாற்றிய ரணில் வடக்கு – கிழக்கைப் பிரித்து, தெற்கிலே சிங்கள இனவாதத்தை பரப்பி, தமிழர்களுக்கு எதிரான மனோ நிலையில் முழுக்க முழுக்க செயல்பட்டு, தமிழ்த் தேசியத்தின் இருப்பை கேள்விக்குறிக்கு உள்ளாக்கிய ஜே.வி.பியுடனும் இயல்பாகவே கலந்துரையாடலுக்குச் செல்வது என்பது 'நெருப்பின் மேல் நீள் உறக்கம் கொள்வதற்கு சமமானது.' இழப்பதற்கு ஏதுமற்ற நிலையில் உள்ள தமிழ் மக்களுக்கு இவர்கள் எல்லோரும் சேர்ந்து மேலும் வலியையும் வேதனையையும் கொடுக்க முனைகிறார்கள்.

தமிழ்க்கட்சிகள்தான் இவ்வளவு காலமும் ஏமாற்றினார்கள் என்றால் இப்போது சிவில் பிரமுகர்களும் ஆயத்தமாகி விட்டனர் என்பதே கசப்பான உண்மை. ஆனாலும் தமிழ்மக்கள் என்ன செய்யப் போகிறார்கள்? யுத்தத்தின் வடுக்களை சுமந்தபடி எதிலியாகத் தவிப்பவர்களை காப்பாற்றுவது யார்? அதற்காக சில மாதங்கள் காத்திருந்துதானாக வேண்டும். காலம் எவரையும் விட்டு வைப்பதில்லை.



# ஆசிய ஈட்டி எறிதல் போட்டியில் தங்கம் வென்றார் ருமேஷ் தரங்க

ஆசிய ஈட்டி எறிதல் சாம்பியன்ஷிப்பில் ருமேஷ் தரங்க இலங்கைக்கு தங்கப்பதக்கத்தை வென்று கொடுத்துள்ளார்.

அது மாத்திரமன்றி, சுமேத ரணசிங்க மற்றும் தில்ஹானி லேகம் ஆகியோர் வெண்கலப்பதக்கம் வென்று தாயகத்திற்கு பெருமை ஈட்டிக் கொடுத்துள்ளனர்.

இரண்டாவது தடவையாக நடத்தப்படும் ஆசிய எறிதல் சம்பியன்ஷிப் தொடருக்கான அனுசரணையை தென் கொரியா வழங்குகிறது.

ஆடவருக்கான ஈட்டி எறிதல் போட்டியில் ருமேஷ் தரங்க 85.5 மீட்டருக்கு திறமையை வெளிப்படுத்தினார்.

இது இலங்கை சாதனையாகவும் போட்டி சாதனையாகவும் பதிவானது.

எவ்வாறாயினும், 5 சென்டிமீட்டரால் அவர் ஒலிம்பிக் விழாவுக்கான வாய்ப்பை இழந்தார்.

ஒலிம்பிக் போட்டிக்குத் தகுதி பெறுவதாயின், 85.50 மீட்டருக்கு திறமையை வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

இதேவேளை, இந்த போட்டியில் மற்றுமொரு இலங்கை வீரரான சுமேத ரணசிங்க வெண்கலப்பதக்கம் வென்றார்.

போட்டியில் அவர் 77.57 மீட்டருக்கு திறமையை வெளிப்படுத்தினார்.

மகளிருக்கான ஈட்டி எறிதல் போட்டியில் இலங்கையின் தில்ஹானி லேகம்கே வெண்கலப்பதக்கம் வென்றார்.

போட்டியில் அவர் 57.94 மீட்டர் தூரத்திற்கு திறமையை வெளிப்படுத்தியுள்ளார்.



# நெல்லிக்குளம் மலை உடைக்கும் பிரதேசத்தை மூதூர் நீதிவான் நேற்று நேரில் சென்று பார்வை

சேனையூர் நெல்லிக்குளம் மலை உடைக்கும் சம்பவ இடத்தினை மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌசான் நேற்றுச் சனிக் கிழமை நேரில் விஜயம் செய்து பார் வையிட்டார்.

மூதூர் கிழக்கு சேனையூர் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட நெல்லிக்குள மலை பிரதேசத்தில் மலை உடைப்பதால் தமக்கு பாதிப்புள்ளதாக கல்மலை உடைக்கும் போது எதிர்ப்பு தெரிவித்த 10 பொதுமக்கள் கடந்த 11 ஆம் திகதி யன்று சம்பூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு 12 ஆம் திகதி மூதூர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப் பட்டதையடுத்து அவர்கள் அனைவரும் சொந்தப் பிணையில் விடுவிக்கப் பட்டிருந்தார்கள்.

இது தொடர்பான வழக்கை மூதூர் நீதிமன்றில் சம்பூர் பொலிஸார் தாக்கல் செய்தார்கள். சம்பவ இடத்திற்கு நேற்று நேரில் விஜயம் மேற்கொண்டு ஆராய் வார் என நீதிவான் தெரிவித்திருந்தார். அந்த வகையில் நேற்றைய தினம் அந்த இடத்திற்கு மூதூர் நீதிவான் தஸ்னீம் பௌசான் விஜயம் மேற் கொண்டு பார்வையிட்டுச் சென்றார்.

குறித்த மலை உடைப்பின் காரண மாக அருகில் உள்ள விவசாயம், போக்குவரத்து, கால்நடை வளர்ப்பு போன்றவற்றுக்குப் பாதிப்பிருப்பதாகக் கிராமத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

இங்கு வருகை தந்த சிரேஷ்ட சட்டத் தரணி தங்கமுத்து ஜயசிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் –

சேனையூர் நெல்லிக்குள மலை யைச் சுற்றி காணிகள் இருக்கின்றன. இங்கு கல் உடைப்பதற்கு எந்த வகை யில் அனுமதி வழங்கப்பட்டது என்று எமக்கு தெரியாது. நீதிமன்றத்தில் இந்த விடயம் இருப்பதால் எமக்குக் கருத்து சொல்ல முடியாதுள்ளது. இதனால் இக்கிராம மக்கள் கஷ்டப்படுகிறார்கள், துன்பப்படுகிறார்கள் என்று மாத்திரம் எமக்கு தெரிகின்றது. – என்றார்.

தற்போது இந்த இடத்தை நீதிவான் வந்து பார்வையிட்டுச் சென்றமையால் 20 ஆம் திகதி வழக்குத் தவணையின் போது எமக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்று நாம் நம்புகிறோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.











# பொசன் பண்டிகையை முன்னிட்டு விசேட பஸ் சேவை முன்னெடுப்பு

பொசன் பண்டிகையை முன்னிட்டு மஹவ ரயில் நிலையம் முதல் அனுராதபுரம் வரை விசேட பஸ் சேவையை முன்னெடுக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

ரயில் பாதை புனரமைப்பு பணிகள் காரணமாக மஹவ -அனுராதபுரத்திற்கிடையிலான ரயில் சேவை முன்னெடுக்கப் படாமையினால் இந்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# நாட்டில் 26 ஆயிரத்து 294 நபர்களுக்கு ஜனவரிக்குப் பின்னர் டெங்குத் தொற்று

இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 26 ஆயிரத்து 294 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அவர்களில் அதிகமானோர் மேல் மாகாணத்தில் இருந்து பதிவாகியுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி மேல் மாகாணத்தில் இதுவரை 9 ஆயிரத்து 675 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், இந்த ஆண்டு டெங்கு நோயினால் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.





# மரக்கறிகளின் விலை உயர்வு

பேலியகொடை மனிங் சந்தையில் மரக்கறிகளின் விலை அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. இதன்படி ஒரு கிலோ கிராம் கரட் 300 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் போஞ்சி 500 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் பீட்ரூட் 450 ரூபாவாகவும் பதிவாகியுள்ளன.

அத்துடன், ஒரு கிலோகிராம் லீக்ஸ் 500 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் தக்காளி 400 ரூபாவாகவும் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு கிலோகிராம் பச்சை மிளகாய் 300 ரூபாவிற்கும், ஒரு கிலோ கிராம் கத்தரிக்காய் 460 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்படுகின்றது.



# கிரிக்கட் சபையின் புதிய யாப்புக்கான சட்டமூலம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

இலங்கை கிரிக்கட் சபையின் புதிய யாப்புக்கான சட்டமூலம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து நேற்று ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கே.டீ.சித்ரசிறி தலைமையிலான நிபு ணத்துவக் குழுவினர் இந்த சட்ட மூலத்தைத் தயாரித்து, ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

இலங்கை கிரிக்கெட் சபை எதிர் கொண்டிருக்கும் பிரச்சினைகள் குறித்து தேடியறிந்து பரிந்துரைகளை முன் வைப்பதற்காக அமைச்சரவையினால் திகதியன்று அமைச்சரவை உப குழு வொன்று நியமிக்கப்பட்டது.

இந்த அமைச்சரவை உப குழுவில், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தலைமையில், மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர, தொழில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

அந்த குழு கிரிக்கட் துறையுடன் தொடர்புபட்ட சகல தரப்பினருடனும் ஆலோசித்து 08.01.2024 திகதி அறிக்கையொன்றை சமர்ப்பித்தது.

அந்த அறிக்கையில் இலங்கை கிரிக்கட் கட்டமைப்பை முழுமையாக மறுசீரமைப்பதற்குபரிந்துரைக்கப்பட்டது. இதற்கமைய தேசிய ஆண்கள், பெண் கள் அணிகள், 19 ,17 வயதுகுட்பட்ட பிரிவு அணிகள் உட்பட பல்வேறு மட்டத் திலான கிரிக்கெட் நிர்வாகம், பயிற்சி மற்றும் இருப்பு, வெளிப்படைத் தன்மை, தொழில் தன்மை மேம்பாடு, திறன், சமத் துவம், நியாயப்பாடு மற்றும் இலங்கை கிரிக்கட்டின் மூலதனமாக காணப்படும் பாடசாலை, மாவட்ட, மாகாண, கழக மட்டத்திலான மறுசீர மைப்புக்கான பரிந்துரைகள் உள்ளடங் கியுள்ளன.

அதன்படி அமைச்சரவை உப குழு அறிக்கையை மையப்படுத்தி, அமைச் சரவையினால் கடந்த பெப்ரவரி 13 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இலங்கை கிரிக்கட் சபைக்கு புதிய யாப்புக்கான சட்டமூலத்தை தயாரிக்க நிபுணத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்த நிபுணர் குழுவில், ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி கே.டீ.சித்ர சிறியின் தலைமையில், சட்டத்தரணி ஹர்ஷ அமரசேகர, கலாநிதி அரித்த விக்ரமநாயக்க, இலங்கை வணிகச் சபையின் தலைவர் துமிந்த உலங்கமுவ ஆகியோருடன், நீதி அமைச்சரின் பரிந்துரைக்கமைவாக சட்டமா அதிபர் திணைக்களத்தை பிரதிநிதித்துவப் படுத்தி பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மனோஹர ஜயசிங்க மற்றும் சட்டமூல தயாரிப்பு திணைக்களத்தை பிரதி நிதித்துவப்படுத்தி உதவி சட்டமூல தயா ரிப்பாளர் சமிலா கிருஷாந்தி உள்ளிட் டவர்கள் அங்கம் வகித்தனர்.

மேற்படி குழுவின் செயலாளர், இணைப்பாளராக ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் லோஷினி பீரிஸ் நியமிக்கப்பட்டார்.

நிபுணத்துவக் குழுவினால் தயாரிக் கப்பட்ட சட்டமூலத்தைக் கையளிக்கும் நிகழ்வில், தேசிய பாதுகாப்பு தொடர் பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோ சகரும், ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் சமித் தலகிரியாவ உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.





# அரசியல் தரப்புகள் தேர்தல் காலப் பிரசாரமாக 13 ஐப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்

## நாமல் ராஜபக்ஷ கோரிக்கை

“தேர்தல் காலப் பிரசாரமாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை பயன்படுத்துவதை அரசியல் தரப்பினர் தவிர்த்துக்கொள்ள வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே ஜனநாயக ரீதியில் அரசியல் உரிமையை வழங்கினார்.”

– இவ்வாறு பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க ஆகியோர் வடக்குக்கு சென்று 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதாக வாக்குறுதி வழங்குகிறார்கள்.

முழு நாட்டுக்கும் இடையூறாக இருந்த விடுதலைப் புலிகள் அமைப்பை இல்லாதொழித்து முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தை துரிதமாக அபிவிருத்தி செய்தார்.




அரசமைப்பின் பிரகாரம், மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டது. தமிழர்கள் தமக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்தார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் எமது ஆட்சியில் தான் அபிவிருத்தியடைந்தது.

தேர்தல் கால பிரசாரமாக அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை பயன்படுத்துவதை அரசியல் தரப்பினர் தவிர்த்துக் கொள்ள வேண்டும். 13 ஆவது திருத்தம் பற்றி அனைவரும் பேசுகிறார்கள்.

ஆனால் காலவரையறையின்றி, பிற்போடப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தல் பற்றி எவரும் பேசுவதில்லை. மாகாண சபைத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளதால் தமிழர்களின் அரசியல் உரிமை பறிக்கப்பட்டுள்ளது என்பதை தமிழ் அரசியல் தலைமைகள் அறியவில்லையா?

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தால் கட்சி என்ற ரீதியில் அதற்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்.”– என்றார்.



# காத்தான்குடியில் துப்பாக்கிச்சூடு நடத்தி பெண்ணிடம் கொள்ளையிட்டவர் கைது!

மட்டக்களப்பு – காத்தான்குடியில் பெண் ஒருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி தங்க நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையிட்டுச் சென்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி பெண் தனது வீட்டில் இருந்த போது, அடையாளந்தெரியாத சந்தேக நபர் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டு, அவரிடமிருந்த தங்க நகைகள் மற்றும் 20 லட்சம் ரூபா பணத்தை கொள்ளையிட்டுத் தப்பியோடியுள்ளார்.

32 வயதான பெண் ஒருவரே காயமடைந்தார் அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

43 வயதான சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் -16.06.2024



## மேஷம்

இன்று உங்களுக்கு சிறப்பான சாதகமான நாள். இது உங்கள் கடின உழைப்பின் மூலம் சாத்தியம் ஆகும்.

உங்கள் பணியாற்றும் திறமைகளை உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவர்கள். உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும்.

உங்கள் துணையுடன் ஒற்றுமையாக இருப்பீர்கள். இதனால் உங்களுக்கு மனதிருப்தி ஏற்படும். உங்கள் துணைக்கு மகிழ்ச்சி கிட்டும்.

எதிர்பாராத பணவரவு காணப்படும். இதனால் உங்கள் சேமிப்பு உயரும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக்கலாம்.



## ரிஷபம்

இன்று மனக்குழப்பத்துடன் காணப்படுவீர்கள். இதனால் ஆரோக்கியமற்ற மண் நிலையும் வேதனையும் காணப்படும். பிரார்தனை மற்றும் இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் சில சவால்கள் நிறைந்திருக்கும். சிறப்பாக திட்டமிட்டு பணியாற்றினால் உங்கள் செயல்திறன் சிறப்பான நிலையில் இருக்கும்.

உங்கள் பதற்றமான மனநிலையை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பிரியமான ஒருவரின் ஆரோக்கியத்திற்காக நீங்கள் பணம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.



## மிதுனம்

இன்று வருத்தங்களை ஒதுக்கித்தள்ளுங்கள் அமைதியாக இருக்க வேண்டும். வெற்றிக்கான முயற்சியை எடுக்க வேண்டும்.

உங்கள் செயல்திறனில் அதிருப்தி காணப்படும். அதிகப் பணிகளை கையாள முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் இருவரிடையேயான புரிந்துணர்வு பாதிக்கப்படும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். சேமிப்பது கடினமாக காணப்படும். உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் பல் வலியால் பாதிக்கப்படலாம்.



## கடகம்

இன்று சிறிய முயற்சியில் பெரிய விஷயங்களை சாதிப்பீர்கள். இன்று உங்களிடம் நம்பிக்கை நிறைந்து காணப்படும்.

இன்று முக்கிய சந்திப்புகளில் பங்கு பெற நேரலாம். உங்கள் மேலதிகாரிகள் இந்த சந்திப்பில் நீங்கள் பங்கு பெறும்முறை, உங்கள் கருத்து மற்றும் உங்கள் தகவல் பரிமாற்றம் கண்டு ஈர்க்கப்படுவார்கள்.

உங்கள் துணையிடம் நட்புடன் பழகுவீர்கள். இதனால் உறவில் மகிழ்ச்சி நிலவும்.

உங்கள் கடின உழைப்பு மற்றும் முயற்சி மூலம் இன்று பணவரவு காணப்படும். இன்று புதிய முதலீடுகளை செய்ய இயலும்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக உங்கள் ஆரோக்கியத்தை ஸ்திரமாக பராமரிப்பீர்கள்.



## சிம்மம்

உங்கள் முயற்சிகளில் வெற்றி காண நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலையும் திருப்தியையும் அளிக்கும்.

உங்கள் மேலதிகாரிகளுடன் நல்லுறவு காணப்படாது. அவர்களால் சில தொல்லைகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் தேவையற்ற வார்த்தைகளை பேசுவதை தவிர்க்க வேண்டும். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இயலும்.

இன்று தேவையற்ற செலவுகள் அதிகமாக காணப்படும். அதனால் பணம் அதிகமாக செலவாகும்.

தோல் சம்பந்தமான பிரச்சினை காணப்படும். எண்ணெய் பதார்த்தங்கள் உண்பதை தவிர்க்கவும்.



## கன்னி

இன்று பதற்றப்படாமல் சமநிலையோடு இருங்கள். உங்கள் வளர்ச்சியில் ஏற்படும் தடைகளை நம்பிக்கையோடு சமாளிக்க வேண்டும்.

அதிகப் பணிகள் காரணமாக உங்களால் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. உங்கள் சகபணியாளர்களுடன் நல்லுறவு காணப்படாது. இன்று நீங்கள் சந்திப்புகளில் கலந்து கொள்வதில் மும்மரமாக இருப்பீர்கள்.

உங்கள் துணையுடன் சிறு பிரச்சினை காரணமாக தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனைப் போக்க மனம் திறந்து பேச வேண்டும். அதன் மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தலாம்.

இன்று பணம் சம்பாதிக்கும் ஆற்றல் குறைந்து காணப்படும். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும். அதிக செலவுகள் காணப்படும். இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.



## துலாம்

இன்றைய சூழ் நிலையில் நீங்கள் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். தியானம் சிறந்த பலனைத் தரும். நம்பிக்கை அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

அதிகப் பணிகள் காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க முறையாக திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடனான உறவில் நல்ல புரிந்துணர்வும் நல்லிணக்கமும் ஏற்பட நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்பு காணப்படுகின்றது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

தலைவலி மற்றும் கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியான போக்கு சிறந்த பயன் அளிக்கும்.



## விருச்சிகம்

வெற்றிகளை பெற்றுத் தரக்கூடிய உறுதியான முடிவுகளை எடுப்பீர்கள். கடினமான பணிகளை எளிதாக முடிப்பீர்கள். உங்கள் நண்பர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை அனுபவித்து மகிழ்வீர்கள். இருவரும் பரஸ்பரம் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் ஆற்றல் அதிகரிக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகமாக இருக்கும் காரணத்தால் நீங்கள் பயனுள்ள முதலீடு செய்ய நினைப்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 16-06.2024

**தனுசு**

இன்று மகிழ்ச்சியான நிகழ்வுகள் ஏற்படலாம். உங்கள் முன்னேற்றத்திற்காக நேரம் செலவு செய்வீர்கள். உங்கள் மென்மையான பேச்சு உங்கள் வெற்றிக்கு சாதகமாக இருக்கும்.

பணியிடச் சூழல் நல்ல பலனளிக்கும் வகையில் சாதகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். வேலை தொடர்பான பயணம் உங்களுக்கு நல்ல பலனளிக்கும்.

உங்கள் இனிமையான வார்த்தை மூலம் இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான சூழல் காணப்படும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் அன்புன் பெருகும்.

இன்று பண வரவு அதிகமாக இருக்கும். சிறிய கடன் வகையில் இன்று பணம் பெருவீர்கள்.

**கும்பம்**

இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். அதனால் உங்களால் சிறப்பாக செயலாற்ற இயலாது. உங்கள் செயல்களை சாதரண போக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று தன்னம்பிக்கை குறைந்து காணப்படுவதால் சிறப்பாக பணியாற்ற இயலாது. முறையாக திட்டமிட்டால் பணிகளை சிறப்பாக கையாளலாம்.

இன்று உங்களிடம் மன உறுதி குறைந்து காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதும் சேமிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.இன்று முதுகுவலி ஏற்படலாம். மருந்து மூலம் குணமாகும்.

**மகரம்**

இன்று கோவில் சென்று சம்பிரதாய முறைப் படி வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். இதன் மூலம் அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தள்ளிப் போடவும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் முறையாக திட்டமிட்டு ஒழுங்கமைப்பதன் மூலம் சிறப்பாக பணிகளைக் கையாளலாம்.

உங்கள் துணையிடம் இன்று தகவல் பரிமாற்ற சிக்கல் காணப்படும். அனுசரித்து புரிந்து கொள்வதன் மூலம் நல்லிணக்கம் ஏற்படுத்த இயலும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறிய அளவில் கடன் வாங்குவீர்கள்.கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளதால் கண்களுக்கு சிகிச்சை மேற்கொள்வது சிறந்தது.

**மீனம்**

உங்கள் அர்ப்பணிப்பு மற்றும் முயற்சி மூலம் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் திறமைக்கான புகழ் பெறுவீர்கள். உங்களுள் மறைந்திருக்கும் ஆற்றல் வெளிப்படும்.

உங்கள் திடமான முயற்சி மூலம் நீங்கள் சாதகமான பலன்களைப் பெறலாம். உங்கள் திறமை மற்றும் தகுது காரணமாக நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.

உற்சாகமான போக்கை கடைபிடிப்பதன் மூலம் உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை அனுபவிக்கலாம். இதனால் இனிமையும் மகிழ்ச்சியும் ஏற்படும்.இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படும். சேமிப்பும் அதிகமாக காணப்படும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படுகின்றது. உங்கள் மன உறுதி காரணமாக திடமாக இருப்பீர்கள்.



